MCOP. 68/2022

நாள்.. 07.03.2023

ம.சா. 2 – பாலமுருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 3ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

3ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்துபோன இராஜேந்திரன் என்பவர் வீட்டில் வேலை செய்ததால் அவரை தெரியும். விபத்தில் இறந்துபோன இராஜேந்திரன் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும் நான் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் சரிதான். இராஜேந்திரன் வந்த இருசக்கர வாகனத்திற்கும் நான் வந்த இருசக்கர வாகனத்திற்கும் இடையே 100 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். இராஜேந்திரன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் எண். TN 65 AB 2629 ஆகும். இராஜேந்திரன் என்பவர் இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரம் நோக்கி வந்தார். நானும் அதே திசையில் மண்டபத்திலிருந்து இராமநாதபுரம் நோக்கி வந்தேன். இராஜேந்திரன் இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது நின்று கொண்டிருந்த நான்கு சக்கரவாகனத்தில் அவர் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. முன்னால் சென்று கொண்டிருந்த நான்கு சக்கர வாகனம் பிரேக் அடித்ததால் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த இராஜேந்திரன் அந்த வாகனத்தின் மீது மோதிவிட்டார். நான்கு சக்கர வாகனம் முன்னால் செல்லவில்லை என்றும் அது ரோட்டின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த வாகனத்தில் மோதிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக இறந்துபோன இராஜேந்திரன் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இராஜேந்திரன் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் விபத்தை நேரில் பார்த்தேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் ரோட்டின் இடதுபுறம் நிறுத்திவைக்கப்பட்டு சைகை விளக்குகள் எரியவிடப்பட்டு இருந்தது என்றும் அதனை கவனிக்காமல் இராஜேந்திரன் என்பவர் அதிவேகமாகவும்,

கவனக்குறைவாகவும் தனது மகனின் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து நின்று கொண்டிருந்த நான்கு சக்கர வாகனம் மீது மோதியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் தான் விபத்தில் இறந்துபோன இராஜேந்திரன் மீது உச்சிப்புளி காவல் நிலையத்தில் குற்ற எண்.317/2021 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து பற்றி எந்த விசயமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் இராஜேந்திரன் தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் சரிதான். இராஜேந்திரனின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக இராஜேந்திரன் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.